**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.4286/ஆ1/2024 நாள். .02.2025**

---

**பொருள் :** பள்ளிக் கல்வி – 2024 –2025 ஆம் கல்வியாண்டு – முன்னாள் தமிழக முதலமைச்சர் பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்த நாள் – 15.07.2024 அன்று கல்வி வளர்ச்சி நாள் கொண்டாடப்பட்டது – தேர்வுக் குழு மூலம் சிறந்த பள்ளிகளை தேர்ந்தெடுத்து பரிசு தொகை வழங்குவது – தொடர்பாக.

**பார்வை :**
1. அரசாணை (நிலை) எண்.123, பள்ளிக் கல்வி (பக5(1)) துறை, நாள்.15.07.2013.
2. சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.34752/எம்1/இ2/2024, நாள்.09.10.2024.

-----

பார்வை – 2 ல் காணும் செயல்முறைகளின்படி, முன்னாள் தமிழக முதலமைச்சர் பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்த நாளான ஜூலைத் திங்கள் 15 ஆம் நாளினை கல்வி வளர்ச்சி நாளாக ஒவ்வொரு ஆண்டும் கொண்டாட அரசால் அறிவிக்கப்பட்டதை யொட்டி 2024 – 2025 ஆம் ஆண்டில் சிறந்த பள்ளிகளாகத் தேர்ந்தெடுக்கப்படும் அரசு / அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளுக்கு உட்கட்டமைப்பு வசதி மேம்படுத்தும் பொருட்டு சிறப்பு பரிசளிப்புத் திட்டத்தின் கீழ் பார்வை –1 ல் காணும் அரசாணையின்படி, ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் மூன்று சிறந்த பள்ளிகளை தேர்ந்தெடுத்து அப்பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதி மேம்படுத்தப்படும் என ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாணையின்படி சிறந்த பள்ளிகளை தேர்ந்தெடுப்பதற்கான வழிமுறைகள் கீழ்க்கண்டவாறு

i) தேர்வு செய்யப்படும் பள்ளி அமைந்துள்ள குடியிருப்புப் பகுதியில் உள்ள மாணவ/ மாணவியர்களை அதிக அளவில் சேர்த்திருக்க வேண்டும். மேலும், மாணவர்கள் இடை நிற்றலை பெருமளவில் தவிர்த்து இருக்க வேண்டும்.
ii) ஆசிரியர்களின் கற்பித்தல் திறன் சிறப்பாக அமைந்திருத்தல் வேண்டும்.
iii) கலை, இலக்கியம், நாடகம் போன்ற துறைகளில் மாணவர்களை ஊக்கப்படுத்துவதில் சிறந்த விளங்க வேண்டும்.
iv) பள்ளியின் அனைத்து வகுப்பு மாணவர்களுக்குள், அனைத்துப் பாடங்களிலும் சராசரி கற்றல் அடைவுத் திறன் 60 % சதவிகிதத்திற்கு மேல் இருத்தல் வேண்டும்.
v) பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகம், கல்விக்குழு ஆகியவை முறையாகவும், சிறப்பாகவும் செயல்பட்டிருக்க வேண்டும்.

மேற்கண்ட வழிமுறைகளைப் பின்பற்றி கருத்துருக்கள் புத்தக வடிவில் தயார் செய்து 2 நகல்களில் முதன்மைக் கல்வி அலுவலகத்தில் "**ஆ1**" பிரிவில் நேரில் 14.02.2025 மாலை 5.00 மணிக்குள் சமர்பிக்க அனைத்து உயர்/ மேல் நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

**// ஒப்பம்//**
**முதன்மைக் கல்வி அலுவலர்,**
**வேலூர்.**

**பெறுநர் :**

அரசு / நிதியுதவி பெறும் உயர்/ மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்.

**நகல் :**

கோப்பிற்கு.

**(பா.க)**